T-UN-300

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# நாஸ்திகமத நிராகரண, ஞானசிவ வாதக் கட்டளை

# அகவல்.

இஃது

உதகமண்டலம் காப்பிப் பிளாண்டர்

ஸ்ரீமத் - கனம். ஆறுமுகம்பிள்ளை யவர்கள்

விரும்பியவாறு,

மதுரைச் செந்தமிழ்ச் சங்கவித்துவான்களி லொருவரும்

வேளாங்கண்ணி சைவசித்தாந்த சபையின்

காரியதரிசியுமாகிய,

ஸ்ரீமத்-கனம்,

நா - இராமசாமிபிள்ளையவர்களால்

இயற்றப்பட்டு,

குன்னூர் அக்கரை கன்டிராக்ட்டர்,

ஸ்ரீமத்-கனம்-கருப்பண்ண பிள்ளையவர்களாற்

சென்னை அமெரிக்கன் டைமெண்ட் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1911.

உ

திருச்சிற்றம்பலம்.

# நாஞசிவ வாதக் கட்டளை

## அகவல்

வேதப் பொருளில் விளக்கிய நாதப்
போதப் பொருடனைப் பொருத்திய தவத்து
மூழ்குபேர்மகான் முழுமனச் சேஷாத்
திரிசிவ ஞாற் சிறக்க வருளிய
தத்துவக் கட்டளை யென்னச் சாற்றிடும்
ஆறு ஞானத்து நாஞ சீவ
வாதக் கட்டளை வழங்கிடு வசனம்
அடைய வோரகவ லாக்கின னணியாய்ப்
படித்தவர் பாடி முடித்தவ ராமெலாங்
கூறுவ னிரைநிரைக் கொள்ளுக வுளத்தே.

## நூல்.

சுத்தப் பிரமமா யிருந்திடுஞ் சர்வ
சாட்சியி னிடத்தே தீயிற் சூடுபோல்
அபின்ன மாகவோர் சத்தியுண் டமைய
அந்தச் சத்தி யதீதப்ர மத்தி
லடங்கிடு காலே சுத்தப் பிரமம்
இந்தச் சத்தியும் விசிரிம் பித்ததாய்ச்

சுத்தப் பிரம*தைச் சூழும் போது
பரை வியாபகம் படுத்திருந் ததனால்
பகர்பரப் பிரம மெனும்பேர் பன்னுவ
இலட்சண சூனிய மாயிருக் கின்ற
இந்தநற் சத்திக் கியல் பிரமத்தி
னுடைய சந்நிதா னத்திற் புருட
சமுக மதனிற் சார்மட மகளிர்க்
கின்பஞ் சனித்தற் போலவும் விகிர்த
குணமறு சாந்த ரசதமோ குணமுள
இச்சுத்த சாந்தத் திற்கு மானந்த
ரூபசத் தியதா வுருவமும் புகல்வ
சுத்த ரசத்தைச் சொலுவர் சித்ரூப
சத்தி யெனவே சார்†தூ தமத்தைச்
சத்துவின் ரூட சத்தியென் றறைகுவ
இந்தக் காரண மான வானந்த
ரூபநற் சத்தி யுடன்பரப் பிரமங்
கூடியுஞ் சர்வா னந்த சுழுத்தியை
அடைபொழு தறைபரப் பிரம மெனும்பேர்
போகிப் பரமா னந்த ரென்கின்ற
பேர்வந் ததுவெனப் பெருமறை கூறுவ
இந்தப் பரமா னந்தர் சித்ரூப
சத்தி யுடனே கூடியுஞ் சர்வ
அரும்பிர காச மென்னுஞ் சொற்பனு

---

* பிரமம் என்பது சீர்பொருத்தத்திற்கு இசையாமையின் பிரம் என நின்றதென்க.

† தூ என்பது சுத்தம் என்னும் பொருளது.

வத்தையை யடையுங் காலைப் பரமா
னந்தரென் பெயர்போய் நலப்பரி பூரண
ரென்கிற பெரும்பேர் வந்துபி னிப்பரி
பூரண ரானவர் புகல்சத் துரூப
சத்தி யுடனே சார்ந்திடிற் சர்வ
வியாபக மென்னுஞ் சாக்கிர வவத்தை
அடைபொழு தந்தப் பரிபூரண ரெனும்
பேர்போய்ப் பரனெனும் பேர்வந் துறுவதே
இந்த அகண்டப ரிபூரண சச்சி
தானந் தப்பிர மத்தி னிடத்திலே
சுத்தியில் ரசிதஞ் தோன்றிடல் போல
மூலமாம் பிர கிருதி யென்றொரு
சத்தி யுண்டாயிற் றென்பது மறிக
அந்த மூலப்பிர கிருதியும் விகிர்த
குணமாகி யமுக் குணத்துடன் கூடி
யிருக்குமந் தப்பிர கிருதியின் சாத்வித
குணத்தை மாயை யென்றே கூறுவ
எலாஞ் சர்வக்ஞ வுபா தியு மென்ப
ஈசுர காரண சரீரமு மென்ப
இந்தமா மாயை யிடத்தினி னிர்மல
நீரிற் பிரதி விம்பம் போல
பிரமஞ் சுலட்சண மாகப் பிரதி
விம்பிக்குங் * கொலோ விந்த விம்ப
சைதன் னியத்தைச் சர்வக்ஞ ராகிய

---

* சொல்-ஓ-என்னும் இரண்டும் அசைகள்.

வீசுர னென்ன விசைக்குவ வேதம்
இந்த சாத்வீக குணமா மாயை
யிடத்தினிற் சாத்தீ கத்திற் சாத்தீ

கம்சாத் தீகத் தில்லிரா சதம்
சாத்தீ கத்திற் றாமத மென்றும்
உண்டே மூன்று குணமென விதிற்சாத்
தீகத் திற்சாத் தீகம் பிரதா
னமாகும் போததிற் பிரதி விம்பித்த
வீசுரன் சகத்தை யிரட்சிக் கையினால்
விட்டுணு வென்ன விளம்பவும் படுமே
சாத்தீ கத்தி லிராசதம் பிர
தான மாகும் போததிற் பிரதி
விம்பித் தவீசுரன் சகத்தைச் சிருட்டிக்
கையினாற் பிரமா வென்னக் கழறுவ

சாத்தீ கத்திற் றாமதம் பிர
தான மாகும் போததிற் பிரதி
விம்பித் தவீசுரன் சகத்தை யுபசங்
காரம் பண்ணுகை யினாலுருத் திரனெனச்
சொல்லவும் படுமே சொல்லி லிப்படி
மூலப் பிரகிரு தியின் சாத்தீக
குணகற் பனைசொல் லியது நற்குணமே
இனிமூ லப்பிர கிருதியி னிராசத
குணமு மனேக ரூபமாய்ப் பிரிந்தும்
அவித்தைக ளென்ன அருஞ்சீவ காரண
தேக மென்னவு மொன்றுக் கொன்று
தார தன்மியமாய்ச் சாற்றவும் படுமே

இந்த அவித்தைக ளிடத்தினும் மலின
நீர்ப்பிர திவிம்பம் போலப் பிரமசை
தன்னியம் பிரதி விப்பித் திருக்கும்
இந்தவிம் பசைதன் னியங்கள் கிஞ்சிக்ஞ
ரென்னவுஞ் சீவ சிதாபாச ரென்னவும்
பின்னரும் பிரக்ஞ ரென்னவும் பேசுவ
இந்த அவித்தைக ளிடத்தி லிராசத
மதனிற் சாத்தீ கம்இரா சதத்தி
லிராசத மிராசத மதனிற் றமதம்
மூன்று குணங்க ளென்றே மொழிகுவ
இராசத மதனிற் சாத்தீகம் பிர
தான மாகும் போததிற் பிரதி
விம்பித் தசிதா பாசன் காமக்
குரோத பரனுக் கூர்கன்ம நிஷ்டன்
இராசத மதனிற் றமதம் பிர
தானமாகும் போததின் பிரதி
விம்பித் தசிதா பாசன் சோம்பல்
நித்திரை மயக்கம் நிரம்ப வடைந்தவன்
இப்படி மூலப் பிரகிரு தியினிரா
சதகுண கற்பனை சார்ந்து சொல்லியதே
இனிமூ லப்பிர கிருதியின் றமத
குணந்தனக் கிரண்டு சத்திகள் கூறுவ
ஆவர ணத்தொடு மமையும் விட்சேபப்
இதிலா வரண சத்தியென் பதுவே
தத்துவ ஞானி சர்வே சுரனையுந்
தவிரவும் மற்றச் சீவருக் கெல்லாந்

தேகத் திரயஞ் சிதாபாசன் * கரி
சைதன் னியங்களைச் சார வொனறேடும்
ஒருபே தங்களை யுணர வொட்டாமல்
மறைக்கு மிதனல் மறைபடு சீவன்
இருபது மொன்றுந் தத்துவ மெல்லாம்
ஒருமைப் பட்டே நானென வுன்னுவன்
இவ்வழி மான மே†றகங் காரக்
கிராந்தி யென்றுங் கிளத்துவ மறைகள்
பெருஞ் சமுசார பந்தமும் பேசிடும்
சற்குரு வருளாற் ‡ சாரியா வரணம்
நீங்கியீர் பத்துட னிற்கு மொன்பதுவுங்
கூடிய தத்துவங் கொண்டதன் மையதை
பேதந் தெரிவதே பெறலரு முத்தி
இவ்வா றுவர ணசத்தியின் காரியம்
இசைத்து முடிந்ததால் இருத்துக மனத்தே
இனிவிட் சேப சத்தியி னிடத்தினுஞ்
சத்ததன் மாத்திரை யான வாகாயம்
பிறந்ததா லாகா சத்தினும் பரிச
தன்மாத் திரையாம் வாயு பிறந்தது

---

* கரி என்பதற்குச் சாட்சி என்பது பொருள்.

† அகங்காரத்துக்கு ஏறு என்னும் அடை கொடுத்தது. தீவினைகளை ஏற்றிக்கொள்ளும் வலியுடையது பற்றி யென்க.

‡ சார்-இ-ஆவரணம் எனப்பிரித்து சார்ந்து நிற்கும் இந்த எனப்பொருள் கொள்க.

வாயுவில் ரூபதன் மாத்திரை யான
அக்கினி பிறந்ததா லக்கினி யினுமே
ரசதன் மாத்திரை தன்னி லப்பு
பிறந்த தென்னப் பேசிடும் பெருநூல்
அப்புவிற் கந்ததன் மாத்திரை யான
பிருதுவி பிறந்த தென்னவும் பேசிடும்
இந்தச் சூட்சும பஞ்ச*பூதத்திற்குக்
காரண மாயிருக் கின்ற விட்சேப
சத்தியி னிடந்தா மதத்தி லுறுஞ்சாத்
திகந் தாமதத் தினுமிரா சதந்தா
மதத்திற் றமத மென்றுமே யற்பங்
கருவு மிருந்த படியினாலே யதன்
காரிய மிந்ததன் மாத்திரை யாகும்
பூதமைந் தொடுமுக் குணமும் பிறந்தன
இப்பஞ்ச பூதம் இனிப்பெயர் பலவே
தன்மாத் திரைக ளென்னவுஞ் சாற்றி
அபஞ்சி கிர்தபூ தங்க ளென்னவுஞ்
சூக்ம பூதங்க ளென்னவுஞ் சொல்லிடும்
முக்குண பூத மென்னவுஞ் சொல்லிடும்
இந்தச் சூக்ம பூதங்களி னின்று
சூக்கும சரீரமுந் தூலபூ தங்களும்
பிறந்தன வதுவு மெங்ஙன மென்னில்
வான்முதற் பஞ்சபூ தங்களி னுடைய
சாத்தி காம்ச மதனிற் பூதத்திற்
கோரொரு மாத்திரை யெடுத் தொன்றாகக்

---

* பூதத்திற்கு என்பது செய்யுள் விகாரத்தான் பூதத்திற்கு என நிற்கின்றது.

கூட்டி வைத்தது*கூறந் தக் காரணம்
இந்த அந்தக்கர ணத்தி லாகாச
மதனதி னம்ச மடைந் தடையாளம்
இந்த அந்தக் காரணந்தா னுகா
சத்தினைப் போல சகல கேள்விக்கும்
இடங்கொடுத் தினிதா யிருப்பது முணர்க
இப்படித் தரிக்கும் விருத்தி யின்பேரும்
மேதயுசு வென்னச் செப்புவ பழமறை
இந்த அந்தக்கர ணத்திலும் வாயுவின்
அம்சங் கூடிடி லதற்கடை யாளம்
இந்த அந்தக்கர ணந்தான் வாயுவைப்
போலலை கிறதால் பொருத்த மென்றுணர்க
இப்படி யலையும் விருத்தியின் பேரை
இயம்பிடில் மனமென இசைக்குவ முதுநூல்
இந்த அந்தக்கர ணத்தி லக்கினியின்
அம்சங் கூடிடி லதற்கடை யாளம்
இந்த அந்தக்கர ணந்தான் தீப்போல்
இதுவே யினதென விளக்குவிக் கிறது
இப்படி விளக்குவிக் கின்ற விருத்தியை
புத்தியென் றுரைக்கும் புகலரு வேதம்
இந்த அந்தக்கர ணத்தில் அப்புவின்
அம்சங் கூடிடி லதற்கடை யாளம்
இந்த அந்தக்கர ணந்தான் அப்புவைப்
போல்விட யங்களில் விடாது பிடித்தலால்
இப்படி யிழுக்கும் விருத்தியின் பேரைச்
சித்த மென்னவும் செப்புவவேதம்
இந்த அந்தக்கர ணத்திற் பிருதுவின்

*கூறு சொல்லுகின்ற

அம்சங் கூடிடி லதற்கடை யாளம்
இந்த அந்தக்கா ணந்தான் பிருதுவி
தன்னைப் போலத் தான்கடி னமதாய்
நின்றுநா னென்றபி மானிக் கின்றதால்
இப்படி அபிமா னிக்கும் விருத்தியை
அகங்கா ரம்மென வலறுவ வேதம்
இன்ன ஆகாச முதலாம் பஞ்சபூ
தங்களி னுடைய சாத்தீ காம்ச
மதனிற் பூதத் திற்கோர் மாத்திரை
எடுத்துத் தனித்தனி வைத்தது சுரோத்தி
ராதி ஞானேந் திரிய மென்னச்
சொல்லப் படுமெனச் சொல்லிடும் வேதம்
இதனதிற் சுரோத்திர மாகாசத்தின்
அம்ச மானதா லாகா சத்தின்
குணமாஞ் சப்த மாத்திரை யறியும்
துவக்கு வாயுவி னம்ச மானதினல்
வாயுவின் குணமாம் பரிச மாத்திரத்தை
அறியு மறிந்திடிற் சட்சு அக்கினியின்
அம்ச மானதா லக்கினி யின்குண
மான ரூபமாத் திரத்தை யறியுமால்
சிங்குவு மப்புவி னம்ச மானதா
லப்புவின் குணமாம் ரசத்தை யறியுமே
ஆக்கிரா ணந்தான் பிருதுவி னம்சம்
ஆனதாற் பிருதுவின் குணமாங் கந்த
மாத்திர மதனை வகுத்தறி யும்மே
இப்படி யைந்து மொன்றோ டொன்று
கூடாததி னுலொன் றுமற் றொன்றின்
குணங்கிர கிக்க வறியா தந்தக்

கரண மதனி லைந்து மாத்திரையும்
ஒன்றாய்க் கூடி னதனைக் கொண்டே
ஐந்திந் திரிய மதனா லைந்து
விடயந் தன்னை யறியுமே யிந்தசாத்
தீககுணத்தி லுளதா மந்தக்
கரண மைந்தும் ஞானேந்திரியம்
ஐந்து மாகப் பத்துஞ் சாத்தீ
காம்ச மானதால் ஞான சா தனமே
இன்ன மைந்துபூ தங்களி லுடைய
விராச தாம்சத் ததனிலும் பூதத்
தினிலோர் மாத்திரை யெடுத்தொன் றாகக்
கூட்டி வைத்தது வியா னாதிபஞ்ச
வாயுவா மிதில்வியா னவாயு வாகா
சத்தி னம்சமு மான படியினால்
ஆகாசத் தைப்போல சர்வாங் கமும்
வியாபித் திருக்கும் பிராண வாயுவு
வாயுவி னம்ச மான படியினால்
வாயுவைப் போல விருதய மிருந்து
நாசியா திப ரியந்த மலைந்திடும்
அபான வாயுவு வக்கினி யம்சம்
ஆனதா லக்கினி தன்னைப் போல
சாடராக் கினியாக வுட் டணித்துக்
கொண்டு குதத்தைப் பற்றிநின் றுண்ட
அன்னபா னாதி தனைச் சீரணிக்குஞ்
சமான வாயுவு வப்புவி னம்ச
மானதாற் றேக நடுவா நாபித்
தான நின்றுணு மன்ன பானாதி
தன்னைச் சகல நாடிக ளிலுமே

அப்புவைப் போல விழுக்கு மென்றறிநீ
உதான வாயுவு பிருதுவி னம்ச
மானதாற் கண்டம் பற்றி நின்றிடவே
பிருதுவி போலக் கடினம தாக
நின்று கடையுமென் றின்னதென் றறிக
இந்த பஞ்சவா யுக்களை யல்லால்
வாந்தியைப் பண்ண வைப்பவ னுகன்
இமைத்து விழிக்க விருப்பவன் கூர்மன்
குறுகுறுந் தும்மல் கிரிகர னுவான்
கொட்டா விதனைக் கொள்தேவ தத்தன்
வீங்குவிக் கின்ற வன் தனஞ் சயனே
வேறே யைந்தென விளம்புவர் சிலரே
இந்த வைந்துப்பி ராண னுக் குரிய
தொழிலே யாகலின் வேறல விதுவாம்
இன்ன மாகாச மாதி பஞ்சபூ
தங்களி னுடைய விராச தாம்ச
மதனிற் பூதத் திற்கோர் மாத்திரை
எடுத்துத் தனித்தனி யிலக வைத்தது
வாக்கா மாதி கன்மேந் திரியம்
என்று சொல்லப் படுமென் றெண்ணுக
இதிலா காசந் தன்னிடம் வாக்கு
வசனிக் கும்மே வாயுவி னிடமாப்
பாணி யிடுத லேற்றமுஞ் செய்யும்
அக்கினி யிடமாப் பாதம் நடக்கும்
அப்புவி னிடம தாகப் பாயுரு
மலசல மாதி தன்னை வெளியினில்
இழுக்கும் பிருதுவி தன்னிட மாக
வுபத்தஞ் சுகத்தைப் பண்ணுமென் றுன்னுக

இந்த வைந்துந் தனித்தனி யிருந்தது
கொண்டு மறுதொழிற் செய்ய மாட்டாது
வியானு மாதி வாயு வைந்து
மாத்திரை யொன்றாய்க் கூடிற் கொண்டு
கன்மேந் திரிய மைந்தன் வழியிலும்
ஐந்து தொழிலு மமைவ தென்றறிக
இந்த வாயுக்க ளைந்துங் கன்மேந்
திரிய மைந்து மாகப் பத்தும்
இராச தாம்ச மானதாற் கிரியா
சாதன மென்னச் சார்ந்துணர்ந் தறிக
அந்தக் கரண மைந்தே ஞானேந்
திரிய மைந்தே வாயுவு மைந்தே
கன்மேந் திரிய மைந்துங் கூடிய
தத்துவ மிருபதுஞ் சூக்கும தேகமே
இந்தச் சூக்கும வுடலை மாயாப்
பிரதி விம்ப ராயிருக் கின்ற
ஈசுர னவித்தை யாகப் பிரதி
விம்ப ராகிய சீவர்க டமக்குப்
பேருக் கொவ்வொரு தேகங் கொடுத்தனர்
அன்று பஞ்சபூ தங்களி னுடைய
செல்வழிந் தனவே சாத்தீ மிராசதம்
சேடித்தது குணமாத் திரந்தா மதம்
சூக்கும தேகம் வாங்காச் சீவர்க்
கெல்லா மின்ன மொரு சிருட்டிக்கா
கட்டு மென்ன கழற நிறுத்தினர்
இப்படிச் சூக்ம வுடல்சொல் லியபிதே
இனியுந் பூத வுற்ல தூத்திப
சொலுது மெங்ஙன மெனின்மினசின்ஞ்

தாமச மாயிருக் கின்ற ஐந்து
பூதந் தனை மொன்றிரண் டாகப்
பகுத்து முதலாம் பாதி யைந்தையு
மொன்று நாலாக்கி யிரண்டாம் பாதி
யைந்துட னேதன் னம்சத் துடனே
கூட்டா மற்ருன் மற்ற நாலுபூ
தத்திற் கரைக்கான் மாத்திரையாகக்
கொடுப்பது பஞ்சீ கரண மென்று
சொல்லப் படுமெனத் துணிந்தனர் அறிஞர்
இப்படி பஞ்சீ கரணம் பண்ணின
தூலபூ தங்க ளிற்ரு குகா
சத்திற் பரிச ரூபமும் ரசமே
கந்த மாகிய நான்கு குணமும்
வியாப்பிய மான படியி லதிரிசி
யம்மாய்ப் போக நிசகுண மாகிய
சப்தமும் வாயு தன்னின் ரூப
ரசகந் தங்க ளாகிய மூன்று
குணமும் வியாப்பிய மான படியால்
அதிரிசி யம்மாய்ப் போகக் காரண
குணமாஞ் சப்தமு நிசகுண மாகிய
பரிசமு மக்கினி தனிலுமே ரச
கந்த மாகிய விரண்டு குணமும்
வியாப்பிய மானதா லதிரிசிய
மாய்ப் போகக்கா ரணகுண மாகிய
சப்த பரிச நிசகுண மாகிய
ரூபமும் அப்புதனிற் கந்த குணம்
வியாப்பிய மாகலி னதிரிசியம தாய்ப்
போகக் காரண குணமாஞ் சப்த

பரிசமு ரூபமும் நிசகுண மென்ன
வாகிய ரசமும் பிருதுவி தன்னிற்
சப்த பரிச ரூபந் தன்னொடு
ரசகந் தங்கள் வந்தன வுணர்நீ.
முன்னைச் சூக்கும பூத மிருந்து
சூக்கும வுடலம் பிறந்தது போல
பஞ்சீ கரணம் பண்ணின தூலபூ
தத்தி னின்று மாறுதத் துவமாய்
நால்வகைப் பிறப்பாய் மூவகைச் சாதி
யாக விருக்குந் தூல தேகங்கள்
பிறந்தன வென்னப் பேசிடும் வேதம்
இதிலு மாறு தத்துவ மாவது
எதெனிற் சர்ம முதிர மாமிசம்
சனாயு மத்தி மச்சையு மிந்த
ஆறன் வகையுந் தூல சரீரம்
நால்வகைத் தோற்ற நவிலிற் சராயுசம்
அண்டசஞ் சுவேதச முற்பிச நான்கே
மூன்று சாதியு மேதெனின் மொழிகுதும்
இகபர புத்தி யிருவகை தன்னையு
கொடுக்கின் றதுமா னுடவுட லென்பர்
உத்தம சாதி யென்னவு முரைப்பர்
பரவுல கத்தின் புத்தியை மறைத்து
இகலோ கத்தின் புத்தி மாத்திரத்தை
அறிபசு பட்சி முதலா மவையெலா
மத்திம சாதி யென்ன மதித்திடு
லோக மிரண்டின் புத்தி தன்னையு
மறைத்திருக் கின்ற மரங்கொடி செடியே
அதன்ம சாதி யென்னவு மறிந்திடு

இப்படிப் பிருதுவி தத்துவ மாக
விருந்திடு கின்றபூ வுலகத்திற்
கண்டது போல அப்பு மக்கினி
வாயு வாகாச மென்னப் பட்ட
தத்துவங் களினு நிரைநிரையே பிதிர்
லோகந் தெய்வ லோகம் யட்ச
கந்தரு லோகஞ் சித்தர் லோகங்
களினு நக்ஷத்திர மாகத் தோற்றிடு
சந்திர னாதி பிதிர்க்கள் சூரியன்
ஆதிதே வதை கந்தருவர் சித்தர்
என்னப் பட்ட தெல்லா முத்தம
தேகம தென்னத் தெள்ளத் தெளிநீ
காம தேனு வயிரா வதமனம்
கருட னாதி மத்திம வுடலம்
கற்பகத் தருவொடு பாரிசாதம்
ஆதியதன்ம சரீரமென் றறிநீ
இந்தத் தூல சரீரமு மன்ன
மயத்தின் கோச மனமுறப் பதியே
சூக்கும் உடலம் மூன்று கோசமே
எங்ஙன மென்னி லியம்புவன் முறையே
பிராண வாயுவுங் கன்மேந் திரியமுங்
கூடிப் பிராண மயகோ சம்மே
மனதும் ஞானேந் திரியமுங்கூடி
மனோமய கோச மென்னமற் றறிக
புத்தியு ஞானேந் திரியமுங் கூடி
விஞ்ஞா னமய கோசம தாமே
காரண சரீர மானந் தமய
கோசம தென்னக் குறிக்கவும் படுமே

இப்படிப் பஞ்ச கோசமுஞ் சொல்லி
இனிது முடித்து மிருமூன் றூன
தத்துவ மாகுந் தூல தேகத்திற்
சூக்கும வுடல மிருத்தலைச் சொல்லுதுங்
கன்மேந் திரிய மான வாக்கும்
ஞானேந் திரிய மான சிங்குவும்
வாயிலி ருக்கு முதான வாயுவும்
மனத்தினுங் கண்ட மதனிலு மிருந்திடும்
பிராண வாயுவும் புத்திபு மிருதயந்
தன்னி லிருக்குஞ் சமான வாயுவும்
சித்தமு நாபியிற் சிவனுமென் றறிக
அபான வாயுவு மதனோடு பாயுருங்
குதத்தி லிருத்தலைக் குறித்தறி தெளிய
வியான வாயுவு ஞானேந் திரியம்
ஆன துவக்கு மகங்கா ரந்தான்
சர்வாங் கமும்வியா பித்தலைச் சாரும்
உச்சியிற்றேயுசு கருவிழி நுனியிற்
சட்சிந் திரியமுஞ் சார்கா துக்குள்
சுரோத்திர மென்னச் சொலுமிந் திரியமும்
மூக்கி னுனியிற் கிராண விந்திரியமும்
கண்ட மதன்மேற் றனித்தனி யிருக்கும்
கழுத்தொடு கீழ்கை கால்குபம் பாணி
பாத முபத்த மூன்றுந் தனித்தனி
யிருக்கு மிப்படி தூல சரீர
தத்துவ மாறு மதிற்குடி புகுந்த
சூக்கும வுடலஞ் சொலி லிருபானே
எண்ணி லிருபத் தாறிணைப் பஞ்ச
பூதமதனின் காரிய மான தால்

ஒருமைப் பாடாக் காரிய சரீர
மென்றே சொல்லி யெடுத்தன ரறிஞர்
காரண மெய்சிதா பாசனுஞ் சாக்கிரந்
தன்னிலு மிருபத் தாறு தத்துவ
முடனே கலந்து நின்றிடு காலை
விசுவ னென்றும் வியவ காரிக
சீவ னென்றுஞ் செப்பவும் படுமே
சொற்பனந் தன்னிற் றால் மெய்யதனை
கைவிட் டதனைக் கரணத் துடனே
கூடி நின்ற போதுதை சதனெனப்
பிரா திபா திகசீ வன்னெனச் சொற்பன்ன்
கற்பித மென்னக் கழறவும் படுமே
சுழுத்தியிற் காரிய சரீர மிருபது
மாறையுவு விட்டுக் காரண வுடலை
மாத்திரம் பொருந்தி யிருந்திடு காலை
பிராக்ஞ ரென்னவும் பாரமாாத் திக
சீவ னென்னவுஞ் சிந்தையிற் கொள்ளுக
பிரமசை தன்னியஞ் சாக்கிரந் தனக்குச்
சாட்சிய தாகவிருந்திடு காலைச்
சீவ வாத்மா வெனச் செப்பவும்படுமே
சொற்பனச் சாட்சி யாயிடு காலை
அந்த ராத்மா வெனவறை யறையப்படுமே
சுழுத்தி தனக்குச் சாட்சிய தாக
விருந்திடு காலைப் பரமாத் மாவென
அவத்தாத் திரய சாட்சிய தாக
விருக்குங் காலை ஞானத் மாவெனக்
கூடத் தாரெனக் கூறவும் படுமே
இப்படி சீவனுக் குளதா மூன்று

சரீரமு மூன்று மவத்தையுங் கூறின
இனியீ சுரவற் குளதா மூன்று
சரீரமு மூன்ற னவத்தையுஞ் சொல்லிடில்
லோககற் பனையாத் தோற்றிடு தூல
பஞ்சபூ தங்களு மதனிடந் தோன்றிய
மூன்று சா திக ளாயிருக் கின்ற
தூல சரீர சமட்டியுங் கூடி
ஈசுர தூல சரீர மென்னவும்
விராட் டெயென் னவும்விளம் பவும்படுமே
இதனுடன் கூடிச் சாக்கிர வத்தையை
பொருந்து மீசனை வைசுவா னரனென
இந்த விருவகை யாகதிட் டான
சைதன் னியம்பிர மாவெனச் சாரும்
சூக்கும பூத மாகிய வைந்தும்
அதனிற் றோன்றிய சூக்கும சரீர
சமட்டியுங் கூடி ஈசுர சூக்கும
சரீர மென்னவு மிரனிய கர்ப்பன்
என்னவும் பேசுவ ரியல்பு ணர்ந்தோரே
இதனொடு கூடிச் சொற்பன வத்தைப்
பொருந்திய வீசன் சூத்தி ராத்மாவென
இவ்விரு வகைதிட் டானசை தன்னியம்
விட்டுணு வென்ன விளங்கவும் படுமே
இந்தத் தூல சூக்கும விருவகை
தனக்கும் வாசனை யுடனே கூடிய
மாயையை யீசுர காரண சரீர
மென்னவு மவ்வியா கிருதமென்னவும்
சொல்லப்படுமெனச் சொல்லின ரறிஞர்
இதனொடு கூடிச் சுழுத்தி யவத்தைப்

பொருந்து மீசுர னந்தரி யாமி
யென்னவு மிந்த விருவகை தனக்கும்
அதிட்டானசைதன் னியமுருத்திரனென
உரைத்தன ருலக வுணர்விறந்தோரே.
சீவன்றன் மூன்றவத்தை தன்னினுந்
தன்மூன் றுடலமாயிருக்கின்ற
விருபத்தேழு தத்துவத்துடனும்
நானெனக்கலந்து நின்றாற்போல
வீசுரன் றன்மூன்றுடலாவிருக்கு
முப்பத்திரண்டு தத்துவத்துடனும்
மூன்றெனுமவத்தை தன்னினுங் கலப்பா
இனிசீ வசிதா பாசன் றன்னுடல்
மட்டுங்கலந்தே யொட்டிட நிற்பன்
ஈசுரன்றனது மெய்யாஞ்சகல
வுடலொடுஞ்சகலபி ரஞ்சந்தன்னோடுங்
கருதிநிற்பாற் கண்டிடிலிந்த
விருவகை தனக்குஞ் சான்றுளதாகும்
பிரமசை தன்யமுஞ் சகலவுடலினுஞ்
சகலபி ரஞ்சந்தன்னினு நிறைந்தே
அப்பாற் பத்துத் திக்கையுஞ்சூழ்ந்தா
லதிக்கிரமித்து மெல்லையற்றிருக்குஞ்
சீவன் றனக்குத் தூல சரீர
வியவகாரத்துக்குமன்னமய
மான சட்கோ சதத்துவமாறே
சூக்குமமெய்தத் துவமிருபானே
சீவனீசுரன் றன்னொடு மவித்தை
வித்தைபிரம விளம்பிடிலேந்தே
ஆகவீர்பத்தோடைந்துதத்துவமே

கூட்டின்முப்பதுமொன்றெனக்குறியே
சூக்கும வுடலவியவகாரந்
தனக்குஞ் சூக்கும மெய்தத்துவமே
யிருபான்சீவ னீசுர னவித்தை
வித்தை பிரமம் விளம்பிடிலைந்தே
எண்ணிடிலிருபத்தைந்தெனவெண் ணுக
காரணவுடல்விய வகாரந்தனக்கே
சீவனுமீசனவித்தை வித்தைப்
பிரமமுமாக வைந்தெனத்தெளிக
ஜீவவி யவகா ரத்துக் குசீவன்
ஈசுரன் பிரமமு மெண்ணிடில் மூன்றே
சாட்சிவி யவகா ரத்துக்குக் கரி
ஒன்றே யீசற்குள வாந்தூல
வுடல வியவ காரந் தனக்குச்
சமட்டி யன்னமய கோச தத்துவ
மாறே சமட்டி சூக்கும வுடல
தத்துவ மிருபது சமட்டி சீவன்
அவித்தை யிரண்டே யீசுர னவித்தை
பிரம மூன்றே பூதமு மைந்தே
முப்பத் தாறே தத்துவ மொத்தமுஞ்
சூக்மமெய் வியவ காரந் தனக்கே
சமட்டி சூக்ம மெய்தத் துவமே
யிருபா னுகுஞ் சமட்டி சீவன்
அவித்தை யிரண்டே சூக்கும பூதம்
ஐந்தென லாகு மீசுரன் வித்தை
பிரம மூன்றே தத்துவ முப்பான்
காரண வுடல வியவ காரந்
தனக்கு மீசன் வித்தை பிரமம்

மூன்று மீசுர வியவ காரந்
தனக்கு மீசன் பிரம மிரண்டே
பிரமவி யவகா ரந்தனக் கும்மே
பிரமு மொன்றே யென்னப் பேசுவர்
இந்திரி யவிய காரந் தனக்கு
இந்திரி யந்தா னென்றே சட்கோ
சதத்துவ மாறே கரணமு மைந்தே
வாயுவு மைந்தே சீவ னீசுரன்
அவித்தை வித்தை பிரமமு மைந்தாம்
ஆகத் தத்வ மிருபா னிரண்டே
மனராச் சியவி காரந் தனக்குக்
கரணமு மைந்தே யதனொடு சீவன்
ஈசனவித் தைவித்தை பிரமம்
ஐந்தா மாகத் தத்துவம் பத்தாம்
இப்படித் தத்வ மதனத னுடைய
தோற்ற நிலையுஞ் சொல்லி முடிந்தன
இனித்தத் துவமே யொடுங்கு வழியினை
யியம்புது மதுவு மெங்ஙன மென்னில்
எல்லாச் சீவ ரிடத்தி லிருக்குந்
தூல மெய்யுந் தன்னு தாரமாந்
தூல பூதங்க டன்னுடன் மடிந்து
பூதமாத் திரமா யொடுங் கிடுமே
இந்தத் தூலபூ தங்களும் பஞ்சீ
கரணம் விட்டுதன் மாத்திரை யான
தாமத குணபூ தங்க ளாக
மிஞ்சு மென்ன மிழற்றவும் படுமே
அன்றுங் கேவல விரணிய கர்ப்பா
வத்தை யென்னவு மறையவும் படுமே

சூக்கும வுடலிரு பதுதத் துவமுங்
கட்டிணை விட்டு பூதங்களி னுடைய
சாத்திகப் பண்பு மிராசத குணமும்
ஆக வொடுங்கு மெங்ஙன மென்னிற்
சகலபி ராணிக ளிடமிருக் கின்ற
அகங்கா ரமுமாக் கிராண முதான
வாயு முபத்த விந்திரி யம்மும்
பிருதுவி தன்னி லொடுங்கிடுஞ் சித்தமுஞ்
சிங்குஞ் சமான பாயுரு மப்பில்
ஒடுங்கும் புத்தி சட்சு வபானனும்
பாதமுந் தீயிற் பாரித் தொடுங்கும்
நெஞ்சு மவற்றோடு நிற்குந் துவக்கும்
பிராணன் பாணியுங் காற்றி லடங்கிடுந்
தேயுசு மதன்கண் சேர்சோத் திரமும்
வியானனு வாக்கு விண்ணி லடங்கும்
அன்றும் பழைய படியே முக்குண
பூத மென்னப் புகலுவர் பெரியார்
இந்தச் சூக்மபூ தங்களும் பிருதுவி
அப்பிற் கரைந்து மடங்கிட லாகும்
அப்பு மக்கினி தன்னிற் சுவறி
அடங்கும் விளக்குப் போலத் தீயுங்
காற்றணைந் தினிதா வடங்கல் கருதுக
காற்றும் விண்ணி லோய்ந்தொடுங் கிடுமே
விணும்விட் சேப சத்தியி லடங்கும்
ஆவர ணத்தோ டண்ணிய சத்தியும்
விட்சே பசத்தி தானுமூ லப்பிர
கிருதியி னுடையதா மதகுண மாத்திர
மாக வால்த்தரு வால விரையினி

வடங்கல் போல வினுமொரு சிருட்டி
தனக்குவித் தாக மாயை தன்னிலும்
அவித்தை தன்னிலு மடங்கிடு மென்க
அந்தமா யையுமவித் தையுமதின் மெய்யாம்
மாமூ லப்பிர கிருதி யென்னச்
சொல்லிய விந்து தத்துவந் தன்னில்
அடங்கிடு மந்த விந்துவும் பாம்பெனும்
பேர்போய்ப் பழுதை யாகக் கண்டாற்
போலத் தன்மே லதியதிட் டான
சைதன் னியமாம் பிரமசை தன்னிய
மாத்திர மாக வடங்கல் மனத்தறி
இப்படிப் பொய்க ளெல்லா முண்மைப்
பொருளொன் றெனவே கண்டு மதுவே
சுபாவசித் தமாநிச மாவிருக் கின்ற
தன்வடி வென்னக் கண்டு தெளிந்து
கவலை கெட்டிருக் கின்றவன் றானே
சீவன் முத்த னென்னச் செப்புவர்
இப்படி தத்துவ வொடுக்கமு மெண்ணுக
இப்படி தோற்றி யொடுங்கு தத்துவமும்
முப்பத் தாறு மென்னவும் உன்னுக
எங்ஙன மென்னி லியம்புதும் முறையே
பூதமு மைந்தே தூலமெய் யாறே
சூக்ம வுடல தத்வமீர் பத்தே
காரண வுடல மாகிய மாயை
அவித்தை யிரண்டா மதன்றன் பிரதி
விம்பித் தசீவ னீச னிரண்டே
இதற்கு மெல்லா மேறதிட் டான
சைதன் னியமா விருந்திடு பிரமம்

ஒன்று மாகத் தத்துவம் முற்றும்
எல்லாச் சீவ ராஞர்க் கும்மிதிற்
பொதுவாம் பூதமைந்தெனப் புகலுவர்
மாயையு மொன்றே மாயாப் பிரதி
விம்பனு மாகிய வீசனு மொன்றே
ஒன்றே பிரம மாகவிவ் வெட்டுஞ்
சகலபி ராணிகள் சமுதா யமுமா
வனுப விக்கப் படுமென வறைப
மற்றிரு பத்தோ டெட்டுந் தாமும்
அவனவ னுக்குப் பிறதக் காக
வனுப விக்கப் படுமென வறைப
எங்ஙன மென்னி லியம்புதும் முறையே
பிருதுவி தத்வ மொன்று மிறக்கில்
எல்லா ராஞர்க் காதாரமு மில்லை
மழையு மறுக்கி லெல்லார்க்குஞ் சலம்
இல்லை தேயு வில்லா திருந்தால்
பாகமு மில்லை வாடை தென்றல்
இல்லா விட்டாற் காற்றி னியக்கம்
இல்லை விண்ணு மிறக்கு மாகில்
ஒருவ ருக்கவ காசமு மில்லை
மாயையு மாயாப் பிரதி விம்பரு
மிறக்கிற் சகல சமயக் தனக்குந்
தெய்வ மில்லை பிரமந் தானும்
இல்லா தாயி னொருவர் தமக்கும்
அறிவில் யாகலி னிந்த வெட்டும்
எல்லாந் தமக்கும் பொதுவென வெண்ணுக
பிறதக் கெங்ஙன மென்னிற் பேசுவல்
ஒருவன் றூல சரீர மிறக்கில்

எல்லார் தூல சரீரமு மிறவா
சூக்கும மெய்யி லொருவன் றனக்கு
வடிவக் குறைவு வந்தா லெல்லார்
தமக்கும் வாராத படியி னாலும்
முத்தர் சுகர்வா மதேவர் முதலாம்
பேருக் கவித்தை சீவனு மிறந்து
போகவு மற்ற பேருக் கெல்லாம்
அவித்தை சீவ னிறவா ததனால்
இந்த விருபத் தெட்டு தத்துவமும்
அவனவ னுக்குத் தனித்தனி யென்பதில்
ஐயமு மில்லை யென்னவு மறிக
தத்துவ மிந்த மூப்பத் தாறில்
எப்போதுந் தானாகவே காணும்
தத்துவ மொன்றே யென்றுந் தனக்கு
அன்னிய மாகக் காண்தத் துவமேழ்
தானுந் தனக்கன் னியம தாகவும்
அனுப விக்கப் பட்டதத் துவமும்
இருபத் தெட்டா மெங்ஙன மென்னில்
அவத்தாத் திரய சாட்சிய தாகும்
பிரமசை தன்னிய மெல்லா மவத்தை
இனுந்தா னாக விளங்கலி னாலும்
ஏனைத் தத்துவம் போலத் தனக்கு
அன்னிய மாகக் காணல தானும்
பிரமசை தன்னிய மென்றுந் தானா
இருக்கப் பட்டது பஞ்ச பூதம்
மாயை மாயாப் பிரதி விம்பர்
ஆகவே யேழுந் தன்றொழி லான
வெட்டுங் கொத்தும் உழவும் பஞ்ச
கிருத்தியம் பத்தவ தாரம் முதலாத்
தொழி லொருக்கா னுந்தன் றொழிலாகக்
காணவு மாகா ததனா லிந்த
தத்துவ மேழுந் தனக்கன் னியமே

அல்லாற் ருனு வாகா ததுவே
மற்றீர் பத்து மெட்டு தத்துவமும்
நானே பார்ப்பா னுனே யரசன்
நானே செட்டி நானே சூத்திரன்
நானே பிரமச் சாரி கிரஸ்தன்
நான்வா னப்பிர னுன் சந்நியாசி
நானே யான்பெண் கறுவல் செவலே
கட்டை நெட்டை நானும் பருத்தேன்
நானு மிளைத்தே னென்று தானுக
வழங்கிடு தூல சரீரமு மாறு
தத்துவந் தாமும் மற்றெரு வேளை
தற்புரம் பாகப் பட்டேன் மாடு
என்கன் றென்றூர் போல வுடலம்
வீங்கி யிளைத்து நரைத்தென் னுடலம்
பிறந்துமித்தனை நாளா யிற்றென
தான்வே ருக தூலமெய் வேறு
உலகந் தன்னி லுரைப்பத னுலும்
நானுங் கண்டேன் கேட்டேன் றெட்டேன்
போகஞ் செய்தே னீந்தே னின்னும்
வாங்கின னின்னு நடந்தே னுண்டேன்
சிந்தனை செய்தே னிச்சய முள்ளேன்
இந்தப் பஞ்சந் தன்னிலு முப்ந்தேன்
என்றுந் தானு வழங்கிடு கின்ற
சூக்கும வுடல தத்துவ மீர்பதும்
மற்றெரு வேளை தன்னிற் றனக்குப்
புறம்புபட் டென்வீ டென்ற னுடைமை
என்றூற் போல வென்கணென் காது
என்றன் மூக்கு வென்னுக் கென்கை

யென்கா லென்றன் மனமென் புத்தி
என்ன கங்கார மென்றன் சித்தம்
எனது பிராண னென்று தான்வேறு
அவை வேறாக வழங்கு விதத்தால்
நானு மறிவே னறியே னென்று
தன்ன தாக வழங்கிடு கின்ற
ஞான மின்மையுஞ் சித்தா பாசனும்
மற்று மொவ்வொரு வேளை தனக்குப்
புறம்பது பட்டு மென்னஞ் ஞானம்
எனது சீவ னெனவழங் குதலால்
இந்த் வீரபத் தெட்டுதத் துவமும்
தானு மாகவுந் தனக்கன் னியமாய்
வழங்கிடு கின்றது சித்தம் வழுத்துக
இப்படிச் சொன்ன குரவனை நோக்கி
சிட்டன் கேட்கும் படியிது மாக
இந்தவீர் பத்து மெட்டு தத்துவமுந்
தானு மானாற் சாட்சியைப் போல
தன்மை யொன்றாகத் தோற்ற வேண்டும்
அல்லாற் பஞ்ச பூதம் போலத்
தனக்கு மன்னிய மாகக் காணக்
கணக்கு மில்லை இருபது மெட்டுந்
தனக்கு மன்னிய மாகிடி லென்றும்
புறம்பது பட்டே யிருத்த லல்லாமல்
ஆகத் தானு வழங்கள வில்லை
அன்னியந் தானு விருந்திடு மென்பதும்
இருட்டா தித்த னென்றாற் போலவும்
விரிவெள் ளாள தீட்சத னென்றாற்
போலச் சொன்னீர் பொறியவித் தோரே

இதுதான் விருத்த மென்று சொல்கின்ற
சங்கைக்குப் பரமார்த் தமதாகத்
தானென் கின்ற தொருவகை யாகவும்
அத்தி யாச மதனு லொன்றும்
ஆகவு மிருவகை யாக வமைந்திடும்
சாட்சிசை தன்னிய மதனைத் தானெனச்
சொல்வது பரமார்த் தம்மது மல்லால்
உபசா ரங்க ளல்லென வுணர்நீ
தனக்கு மன்னிய மாயிருக் கின்ற
இந்த வீர்பத் தெட்டையுந் தானெனச்
சொல்வது கட்டையைக் கள்ள னென்வும்
பழுதை தன்னைப் பாம்பெனல் போலவும்
மக்கண் மனையைத் தானெனல் போலவும்
மைய லல்லாமல் வாய்மையு மல்ல
ஆதலி னறிபாக் காலந் தொடங்கித்
தானல வென்று காணப் பட்ட
தத்துவ மேழா மென்று மிவ்வாறு
விவேக மதுதான் பண்ணின பினனர்
தானல வென்று காண்தத் துவங்கள்
எட்டு மிருபதா மாகவு மிந்த
முப்பத் தைந்து தந்துவந் தன்னையும்
அதற்குக் கூறிய குணங்குறி யுடனே
கூடக் கண்டிடு மறிவு கடத்தைப்
பார்க்கின் றவனுங் கடமத னுக்குப்
புறம்பது மாக விருந்து கடத்தைப்
பார்ப்பது போல விந்த முப்பதும்
ஐந்தையுங் காணும் பேரறி வதுவான்
முப்பத் தாறுந்தத் துவமாகிய

அதுதா னென்ன வறிந்தது தானே
பரமசி வன்னென நேர்தெளிந் தவனே
சிவதரி சனமே யுடைய சீவன்
முத்த னென்னச் சொல்லுத லுத்தரம்
இப்படிப் பிரமந் தானென வுன்னி
மற்ற முப்பது மைந்து தத்துவமுந்
தனக்கு மன்னிய மென்னப் பிரித்தே
அறியா வவிவே கிகளகங் காரக்
கிராந்தி தன்னால் மக்கள் மனைகள்
தவிப்பதைத் தானே தவிக்கின் றேனென
உலகு டனாம் போலவு மிந்த
இருபது மெட்டன் றொழிலையுந் தனது
தொழிலென மையற் றோன்றுவ வதனால்
இந்த விருபதும் எட்டி னாலும்
ஆர்ச்சிக் கவுமே செய்த புண்ணிய
பாவம தாலுங் கட்டுப் பட்டு
அந்தக் கன்ம வயத்தின் வண்ணம்
இறத்த லதனோ டியன்ற சனனம்
சமுசா ரத்திற் சாருறு கின்றோம்
என்று மயக்கங் கொள்ளுவ னென்க
பிரமசை தன்னியந் தானே தானென
உன்னியு மற்ற முப்பத் தைந்துந்
நானல வென்னத் தெளிவிவே கிக்கு
அகங்கா ரக்கி ராந்தியு முற்ற
அற்ற தாகவி னிந்த விருபதும்
எட்டன் றொழிலா மதனையும் நான்செய
இல்லை யென்று மிந்த விருபதும்
எட்டு முண்கின் றதைநா னேயுண்டல்

இல்லை யென்றுந் திடப்படத் தேறி
மையலு மறவே விருக்கும் வணத்தால்
இந்த விருபது மெட்டி னாலும்
ஆர்ச்சிக் கட்படு புண்ணிய பாவம்
அதன்க ணின்றும் விடுபட் டின்னும்
கன்ம மிலாத படியாற் சனன
மரணா திசமு சார மில்லாமல்
முத்தனு மாகிப் பிரம மாத்திரம்
ஆகவு மிருப்ப னென்ன வறிந்திடு
இவனைச் சீவன் முத்த னென்னவும்
திடப்பி ரக்ஞ னென்னவு மின்னம்
அதிவரு ணாச்சி ரம்மி யென்னவும்
குணாதீ தன்று னென்னவும் பகவ
பத்தனென்றும் பார்ப்பா னென்றுஞ்
சொல்லு மிந்த வாறையுஞ் சாத்திரம்
முறையிடு கின்ற வென்னவு மறிக
சகலரு மிந்தத் தத்துவ மதனை
விசாரமுஞ் செய்து மோக்கமு மடைக
முற்றுப் பெற்றது முன்றிரு வருளே.

திருச்சிற்றம்பலம்.

குருவே துணை.

## விஞ்ஞாபனம்.

தஞ்சாவூர் டிஸ்ரிக்ட் ராஜமன்னார்குடி தாலூகா அரிச்சிய புறமிருந்து யாம் இவ்வூர் வந்தநாள் தொடங்கி எமக்குத் தொன்று தொட்டுள்ள வன்னிய ரென்கின்ற பட்டப்பெயர் தெரியாமல் பிள்ளையெனவே வழங்கிவந்துவிட்டதால் அதுபோலவே இந்நூலின் கண்ணும் நா. இராமசாமி பிள்ளை எனவே வெளியிடலாயிற்று.

இங்ஙனம்
ஆக்கியோன்
நா-ராம.